தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.06.2013 A.M**

---

## இந்த வாரத்துக்குள் கிருஷ்ணா நீர் திறந்துவிட வாய்ப்பு

ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து இந்த வாரத்துக்குள் கிருஷ்ணா நீர் திறந்துவிட வாய்ப்புள்ளதாக நீர் வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அப்போது பூண்டி ஏரிக்கு விநாடிக்கு 300 கன அடி தண்ணீர் வர வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. கிருஷ்ணா நீர் வழித்தடமான உப்பளமடுகு பகுதியில் கால்வாய் சீரமைக்கும் பணிகள் சில மாதங்களாக நடைபெற்று வந்தன.

இதன் காரணமாக சென்னைக்கு வரும் கிருஷ்ணா நீர் கடந்த 2 மாதங்களுக்கு முன் நிறுத்தப்பட்டது. தற்போது அந்த பணிகள் நிறைவடைந்ததை அடுத்து இந்த வார இறுதிக்குள் கிருஷ்ணா நீரை திறந்துவிட ஆந்திர அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக நீர்வளத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஒப்பந்தத்தின்படி, தமிழகத்துக்கு ஆண்டுக்கு 12 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திரம் வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது

## இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ிருவள்ளூர் மாவட்ட  விவசாயிகள் குறை தீர்க்கும் நாள்  கூட்டம், வெள்ளிக்கிழமை (ஜூன் 21) நடைபெறவுள்ளது. காலை பகல் 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவராவ் தலைமை வகிக்கிறார்.

இதையொட்டி திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, வேளாண் விற்பனைத் துறை, இதர வேளாண் சார்ந்த அனைத்துத் துறைகள் மற்றும் பல்வேறு துறைகள் அலுவலர்களும் பங்கேற்று விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காணவுள்ளனர்.

எனவே இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில் தவறாமல் பங்கேற்று பயன்பெற வேண்டும் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## வேளாண். கல்லூரியில் உணவு பதப்படுத்தும் தொழிற்கூடம் திறப்பு

விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக உணவு பதப்படுத்தும் தொழிற்கூடத்தை வேளாண். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) எஸ்.பி. சுந்தரம் வியாழக்கிழமை தொடக்கி வைத்தார்.

அப்போது அவர் பேசும்போது, விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்ற வேண்டும். அதற்கு விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்ய வேண்டும். தொழில்முனைவோராக மாறவேண்டும் என்றார்.

வம்பன் அறிவியல் மையத் தலைவர் க. வைரவன் பேசுகையில், இரண்டாம் பசுமைப் புரட்சி தற்போது தொடங்கியுள்ளது. விளைபொருள்கள் அறுவடைக்குப் பின்னர் சரியான பாதுகாப்பு, கவனம் இன்மையால் 30 சதவிகிதம் சேதமடைந்து வருகிறது. இதை முழுமையாகத் தடுத்தாலே விவசாயிக்கு லாபத்தைத்தரும். அதற்கு அறுவடைக்குப்பின் நவீன நுட்பங்களைப் பயன்டுத்தி பொருள்களை சேமித்து, மதிப்புக்கூட்டிய பொருள்களாக மாற்றவேண்டும் என்றார்.

மனையியல் கல்லூரிப் பேராசிரியர் எம்.ஆர். பிரேமலதா பேசுகையில், சிறுதானியங்கள், தக்காளி, காய்கறிகள், கனிவகைகளை இங்குள்ள கருவிகளைப் பயன்படுத்தி விவசாயிகளே பல்வேறு மதிப்புக்கூட்டிய பொருள்களை

தயாரிக்கலாம். இதன் பொறுப்பாளரான முனைவர் கமலசுந்தரி, விவசாயிகளுக்கு நுணுக்கங்களையும், பயிற்சியையும் அளிப்பார் என்றார்.

அறிவியல் மையத் தலைவர் ந.சோ. வெங்கட்ராமன் வரவேற்றார். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க ஆலோசனைக் கூட்டம்

கொடைக்கானல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் சார்பில், ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, சங்கத் தலைவர் பிச்சை தலைமை வகித்தார். தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க நிர்வாகி ஜனார்த்தனன் முன்னிலை வகித்தார். துணைத் தலைவர் விக்ரம் செந்தில் வரவேற்றார்.

கூட்டத்தில், புதிய நிர்வாகிகளைத் தேர்வு செய்து, விவசாய மக்களுக்கு பணியாற்ற வாய்ப்பு வழங்கிய தமிழக முதல்வருக்கும், அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, விவசாய வேளாண் ஈடு பொருள்களை கொடைக்கானல் நகர்ப் பகுதிகளில் வைத்து வியாபாரம் செய்வதற்கு கடை அமைப்பது குறித்தும், விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.

முன்னதாக, இச்சங்க உறுப்பினர் கிருஷ்ணன் இறந்ததற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இதில், நிர்வாகஸ்தர்கள் பாலச்சந்தர், அன்சாரி, சுந்தரவடிவேலு, ரூபி ஸ்டெல்லா,ஈஸ்வரி, சிவராமன், போதுமணி ஆகியோர் கலந்துகொண்டனர். செயலர் பழனிவேல் நன்றி கூறினார்.

## அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம்: காங்கிரஸ்

திருப்பூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் தொகையை பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் பாகுபாடின்றி வழங்க வேண்டும் என காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

திருப்பூர் புறநகர் மாவட்ட காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டம் திருப்பூர் காவேரி அம்மன் திருமண மண்டபத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதற்கு புறநகர் மாவட்டத் தலைவர் ப.கோபி தலைமை வகித்தார். மாநகரத் தலைவர் டி.டி.கே.சித்திக் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும். காங்கேயம்பாளையத்தில் தனியார் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

வறட்சி நிவாரணத் தொகையை பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் பாகுபாடின்றி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 46.26 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 46.26 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 3,596 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.31 டி.எம்.சி.

## மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை பராமரிக்க வேண்டுகோள்

வேலூர் மாநகராட்சி பகுதியில் உள்ள கட்டடங்களில் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிக்குமாறும், இதுவரை மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை அமைக்காதவர்கள் உடனடியாக அமைக்குமாறும் ஆணையர் ஜானகி ரவீந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்த அவரது செய்திக் குறிப்பு: மாநகராட்சியின் 4 மண்டலங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டு மழைநீர் சேகரிப்பு குறித்த களப்பணி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் 3 நாள்களில் 6,592 கட்டடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 3,810 வீடுகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு உள்ளது. 2,782 வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லை. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இருந்தும் நல்ல நிலையில் இல்லாதவை 2,286 என கண்டறியப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு அமைக்கப்பட்டும், அவற்றை பராமரிக்காதவர்கள் செப்பனிடும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இதுவரை மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்காதவர்கள் அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## விவசாயிகளுக்கு இடுபொருள்கள்

மேற்குஆரணி வட்டாரம், வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் மேற்குஆரணி வட்டாரத்தைச் சேர்ந்த அம்மாபாளையம், தச்சூர், சென்னானந்தல், பாளைய ஏகாம்பரநல்லூர், 5புத்தூர் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் செயல்முறை விளக்கத்துடன் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுமித்ரா, தோட்டக்கலை உதவி அலுவலர்கள் ரமேஷ், வேடியப்பன், மஞ்சுளா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும் ஆரணி வட்டார வேளாண்மைத் துறை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்புக் கருவி, மண்புழு உரம், ஊட்டமேற்றிய தாது உப்புக்கலவை, கை தெளிப்பான் ஆகியவை வழங்கப்பட்டன.

இதில் அட்மா தொழில்நுட்ப மேலாளர் சதீஷ்குமார் மற்றும் ஆனந்த், பாக்கியவாசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க 5 ஏக்கர் வரை 100 சத மானியம்

சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க 100 சத மானியம் இதுவரை ஒரு ஏக்கருக்கு மட்டும் இருந்ததை 5 ஏக்கர் வரை உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தருமபுரி மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி தெரிவித்தார்.

தருமபுரி மாவட்ட தோட்டக்கலைத் துறையின், தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கான மாவட்ட அளவிலான விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூடுதல் கட்டட அரங்கில் நடைபெற்ற இந்த முகாமை தொடக்கி வைத்து ஆட்சியர் ஆர்.லில்லி பேசியது:

தோட்டகலைப் பயிர்கள் சாகுபடியில் முன்னோடி மாவட்டமாக தருமபுரி உள்ளது. மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பான 1.5 லட்சம் ஹெக்டேரில் 75 ஆயிரம் ஹெக்டேர் வரை தோட்டக்கலைப் பயிர்களான மலர்கள், பழங்கள், காய்கறிகள், பணப்பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் மழை பொய்த்து போனதால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்தவிட்டது 600 முதல் 800 அடிக்கு மேல் நிலத்தடி நீர் மட்டம் சென்றுவிட்டது. இந்தச் சூழலில் குடிநீருக்கும், பாசனத்தும் தண்ணீர் வேண்டுமெனில் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியது அவசியம்.

மழைநீர் சேகரிப்பு மிகவும் அவசியமானது. அதுமட்டுமல்லாது சாகுபடிக்கு நுண்ணீர்ப் பாசன முறைகளான சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்புநீர்ப் பாசனத்தை அனைத்து விவசாயிகளும் பின்பற்ற வேண்டும். இதன் மூலம் தண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும்.

நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தில் தமிழக அரசு மானிய உதவி வழங்கி வருகிறது. முன்பு ஒரு ஏக்கர் வரை வைத்துள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத மானியம் வழங்கப்பட்டது. இப்போது, 5 ஏக்கர் வரை வைத்துள்ள விவசாயிகளுக்கும் 100 விழுக்காடு மானியம் வழங்கப்படும். இதர விவசாயிகளுக்கு 5 ஹெக்டேர் வரையில் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது.

எனவே, விவசாயிகள் அந்தந்தப் பகுதியில் உள்ள தோட்டக்கலை அல்லது வேளாண்மைத் துறை அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கான உதவிகளைப் பெறலாம். இதற்காக 21 நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் இதுவரை 5,720 ஹெக்டேர் பரப்பில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க ரூ.24 கோடி வழங்கப்பட்டுள்ளன. கடந்தாண்டு 3,504 விவசாயிகள் மனு அளித்துள்ளனர். இவர்களுக்கு மானியம் விடுவிக்கப்பட்டு வருகிறது. நிகழாண்டு வேளாண்மைத் துறை மூலம் 1,275 ஹெக்டேர் பரப்பிலும், தோட்டக்கலைத் துறை மூலம் 560 ஹெக்டேரிலும் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி சாகுபடி பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

இந்தக் கூட்டத்தில், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் பி. மனோகரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கே. வெங்கடேசன், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பச்சியப்பன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பி. பாஸ்கர், வேளாண் அறிவியல்

நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் என். தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசன முறைகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

## சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர்பாசனம் அமைக்க 100 % மானியம்

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் 17,127 எக்டேரில் தோட்டக்கலை பயிர்களும், 49,876 எக்டேரில் வேளாண்மை பயிர்களும் பாசன வசதி மூலம் பயிரிடப்பட்டு வருகின்றன. லாபகரமான விவசாயம் செய்ய சொட்டுநீர் பாசனமுறை அமைப்பது அவசியமானது. இதன் மூலம் 60 சதவிகித தண்ணீரை மிச்சப்படுத்தலாம். களை கட்டுப்படுத்துவதோடு, தரமான விளை பொருள்களை உற்பத்தி செய்து அதிக வருவாய் ஈட்டலாம்.

தமிழக அரசு கரூர் மாவட்டத்தில், நடப்பாண்டில் 1703 எக்டேர் பரப்பில் சொட்டுநீர் பாசனம் அமைக்க ஆணை வழங்கியுள்ளது. இதை வேளாண்மை, தோட்டக்கலைத் துறைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுத்துகிறது. இத்திட்டம் மூலம் சிறு விவசாயிகள் 5 ஏக்கர் வரையிலும், குறு விவசாயிகள் 2.5 ஏக்கர் வரையிலும் 100 சதவிகித மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து பயனடையலாம். இதர விவசாயிகள் 12.50 ஏக்கரில் 75 சதவிகித மானியத்தில் சொட்டு நீர் பாசன முறையை அமைக்கலாம்.

இம் மாவட்டத்தில் கடந்த 2012 -13 -ல் 738.40 ஹெக்டேர் பரப்பிற்கு, 601 விவசாயிகளுக்கு மான்யமாக ரூ. 3.40 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டுக்கு, 1703 ஹெக்டேர் பரப்பிற்கு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இப்பாசன முறையில் விவசாயம் செய்வதால் குறைந்த நீரில் அதிக சாகுபடி, அறுவடை பொருள்களின் தரம் அதிகரித்தல், மகசூல் அதிகரிப்பு, பாதுகாப்பான மண்வளம் உள்ளிட்ட பல பயன்கள் உள்ளன. சொட்டுநீர் பாசனம் அமைக்க 17 நுண்ணீர் பாசன நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப நிறுவனங்களை தேர்வு செய்து கொள்ளலாம். மேலும் விவசாயிகள் தங்கள் வட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலைத்துறை மற்றும் சர்க்கரை ஆலை களப்பணியாளர்களை தொடர்புகொண்டு சொட்டுநீர் பாசனம் அமைத்துக் கொள்ளலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். மேலும் இது குறித்து தகவல்களை பெற, தான்தோன்றிமலை தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக தொலைபேசி எண் -

04324 - 255289, உதவி இயக்குநர் கைபேசி எண் 9994775748, கரூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் கைபேசி எண் 9444161874, க.பரமத்தி உதவி இயக்குநர் கைபேசி எண் 9443308369, அரவக்குறிச்சி உதவி இயக்குநர் கைபேசி எண் 9444161874, கிருஷ்ணராயபுரம் உதவி இயக்குநர் கைபேசி எண் 8973242300, குளித்தலை உதவி இயக்குநர் கைபேசி எண் 9842429385, தோகைமலை உதவி இயக்குநர் கைபேசி எண் 9443456111 மற்றும் தரகம்பட்டி உதவி இயக்குநர் கைபேசி எண் 9443001309 ஆகிய எண்களை தொடர்புகொண்டு தகவல்களை பெறலாம்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 16.40 அடியாக இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 16.40 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 21 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## மழைநீர் சேகரிப்புத் திட்டம் குறித்து மீண்டும் விழிப்புணர்வு

தஞ்சாவூர் நகராட்சியில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் குறித்து மீண்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி வியாழக்கிழமை தொடங்கியது.

தஞ்சாவூர் கீழவாசல் பகுதியில் வியாழக்கிழமை நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு முறைகள், பராமரித்தல் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் நகர்மன்றத் தலைவர் சாவித்திரி கோபால் பேசியது:

நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்துவிட்டதால், மழைநீர் சேகரிப்புத் திட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி, இந்தத் திட்டம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்தத் திட்டத்துக்காக நகராட்சி நிர்வாகம் மூலம் என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்யத் தயாராக இருக்கிறோம்.

வீடுகளில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு ஏற்படுத்தினால் பருவமழை பெய்யும்போது பயனுள்ளதாக இருக்கும். இதன்மூலம், நிலத்தடி நீர்மட்டம் உயரும். இந்த மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பைக் குடிசை முதல் மாளிகை வரை ஏற்படுத்தலாம் என்றார் சாவித்திரி கோபால்.

நகராட்சி ஆணையர் என். ரவிச்சந்திரன் பேசியது:

நகராட்சி எல்லையில் 40,000 கட்டடங்கள் உள்ளன. இவற்றில் எந்தெந்த இடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உள்ளன என்பது குறித்து கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு இல்லாத கட்டடங்களில் கட்டமைப்பை உருவாக்குமாறு அதன் உரிமையாளர்களிடம் அறிவுறுத்தப்படும். மேலும், பல கட்டடங்களில் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, தற்போது பராமரிப்பின்மைக் காரணமாக செயலற்றுக் கிடக்கின்றன. அவற்றையும் சீரமைத்து செயல்பாட்டுக் கொண்டு வர உரிமையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்படும்.

இதுதொடர்பான தொழில்நுட்பச் சந்தேகங்களைப் பொதுமக்கள் கேட்டறிவதற்கு வசதியாக தனியாகத் தொலைபேசி எண் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, 04362 - 231021 என்ற எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் என்றார் ரவிச்சந்திரன்.

நகராட்சி செயற்பொறியாளர் சீனிவாசன், நகர்நல அலுவலர் பி. சிவனேசன், நகரமைப்பு அலுவலர் இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பயிர்க் கடன் வழங்க ரூ. 160 கோடி ஒதுக்கீடு

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2013 - 14 ஆம் ஆண்டில் பயிர்க் கடன் வழங்க ரூ. 160 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

தஞ்சாவூரில் வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகக் குழுத் தலைவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாமைத் தொடக்கிவைத்த அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் முதல் நிலையில் உள்ள 319 சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு 3,495 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மே 9-ம் தேதி பொறுப்பேற்றனர். இரண்டாம் நிலையில் உள்ள 5 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு 55 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மே 11-ம் தேதி பொறுப்பேற்றனர். மாவட்ட அளவிலான சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெறவுள்ளது.

மாவட்டத்தில் 2013 - 14 ஆம் ஆண்டுக்குப் பயிர்க் கடன் வழங்க ரூ. 160 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 2,101 பேருக்கு ரூ. 8.86 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 1,159 நியாய விலைக் கடைகள் மூலம் மாதந்தோறும் 13,000 மெட்ரிக் டன் இலவச அரிசியும், 1,121 மெட்ரிக் டன் சர்க்கரையும், 914 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும், 331 மெட்ரிக் டன் கோதுமையும் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருள்களான துவரம் பருப்பு 455 மெட்ரிக் டன்னும், உளுந்து 139 மெட்ரிக் டன்னும், பாமாயில் 577 கிலோ லிட்டரும் அங்காடிகளில் வழங்கப்படுகிறது.

மத்திய கூட்டுறவு வங்கிகளில் தானியங்கி மூலம் பணம் பட்டுவாடா செய்யும் இயந்திரங்களை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் தற்போது அதிக அளவில் நகைக் கடன்கள் வழங்கப்படுவதால், அவற்றின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கண்காணிப்பு கேமரா அமைக்கப்படவுள்ளது.

கூட்டுறவு சங்கக் கட்டடங்களில் முதல் கட்டமாக 118 சங்கங்களில் ரூ. 2.61 கோடி மதிப்பில் சூரிய ஒளி வாங்கிகள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இந்தச் சாதனம் அமைக்க மாவட்டத்தில் 10 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவு பண்டகசாலை கட்டடங்கள் புதுப்பொலிவுடன் திகழ தஞ்சாவூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் சந்திரசேகரபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளை ரூ. 20 கோடி மதிப்பில் நவீனமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் பாஸ்கரன்.

கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ச. சுப்ரமணியன், துணைப் பதிவாளர் அ. ஜீவா, மத்திய கூட்டுறவு வங்கிப் பொது மேலாளர் மணிவேல், நபார்டு உதவி மேலாளர் கே. சுப்பிரமணியன், துணைப் பதிவாளர் மு. முகமது ரபி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில், மாநில அரசின் தீவனப் பயிர் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1,400 விவசாயிகளுக்கு தீவன உற்பத்தி செய்ய மானியமாக ரூ. 42 லட்சம் வழங்கப்பட உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்து ஆட்சியர் மேலும் கூறியது:

கால்நடைத்துறை மூலம் மாநில அரசின் தீவனப் பயிர் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1,400 விவசாயிகள் தீவனப் பயிர் உற்பத்தி செய்ய மானியம் வழங்க பெரம்பலூர் மாவட்டத்துக்கு ரூ. 42 லட்சம் பெறப்பட்டுள்ளது.

தீவனப் பயிர் உற்பத்தி செய்ய உழவுப் பணி, நடவு, களை எடுத்தல், விதை மற்றும் உர செலவு ஆகியவற்றுக்காக ஒரு விவசாயிக்கு ரூ. 3 ஆயிரம் மானியம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பாசன வசதியுடைய 0.25 ஏக்கர் நிலம், 2 மாடுகள் ஆகியவை 3 ஆண்டுகளுக்கு மேல் வைத்துள்ள, இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பயன்பெறாதவராக இருக்க வேண்டும். மேலும், பாசன வசதிக்காக மழைத்தெளிப்பான் பெறவும் மானியம் வழங்கப்படுகிறது. மழைத்தெளிப்பானின் மொத்த விலையான ரூ. 25 ஆயிரத்தில் 75 சதவீத அரசு மானியமாக ரூ. 18,750 அளிக்கப்படும். எனவே தகுதியுடைய விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தீவனப்புல் உற்பத்தி செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) மா. இந்திரா உள்பட விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## "விவசாயிகள் புதிய ரப்பர் இனங்களை நடவு செய்ய வேண்டும்'

ரப்பர் விவசாயிகள் புதிய ரப்பர் இனங்களை நடவு செய்ய தயங்கக் கூடாது என ரப்பர் வாரிய வளர்ச்சி அலுவலர் என். போஸ் கூறினார்.

குலசேகரத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ரப்பர் விவசாயிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் அவர் கூறியதாவது, இந்தியாவில் 12 லட்சம் ரப்பர் விவசாயிகள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் சிறு மற்றும் குறு விவசாயிகள்.

பல்வேறு காரணங்களைக் கூறி குமரி மாவட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் பழைய ரப்பர் இனங்களையே மீண்டும் நடவு செய்கின்றனர். ஆர்.ஆர்.ஐ.எம். 600 போன்ற ரப்பர் இனங்களை நடவு செய்வதால் விவசாயிகளுக்கு எந்த நன்மையும் இல்லை. ஆர்.ஆர்.ஐ.ஐ. 105 மற்றும் ஆர்.ஆர்.ஐ.ஐ. 400 வகை இனங்களை நடவு செய்வதற்கு விவசாயிகள் தயங்கக் கூடாது.

குமரி மாவட்டத்தில் சில தனியார் ரப்பர் தோட்டங்களில் ஆர்.ஆர்.ஐ.ஐ. 105 இனத்திலிருந்து ஹெக்டேருக்கு ஆண்டுக்கு 2800 கிலோ வரை ரப்பர் கிடைக்கிறது. ஆனால் இந்த இன ரப்பர் மரங்கள் ஒடிந்து விழுகிறது அல்லது இலை உதிர்வு ஏற்படுகிறது போன்ற காரணங்களைக் கூறி சிறு மற்றும் குறு விவசாயிகள் இந்த இனத்தை நடவு செய்யத் தயங்குகின்றனர்.

ரப்பர் மரங்களில் ஏற்படும் அனைத்து பிரச்னைகளுக்கும் ரப்பர் வாரியம் தீர்வைக் கண்டுள்ளது. எதிர்காலத்தில் ரப்பர் விலை மேலும் உயராத சூழ்நிலை ஏற்படுமானால், அதிகம் உற்பத்திக் கொடுக்காத ரப்பர் இனங்களால் விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்படும்.

எனவே ரப்பர் வாரியம் கண்டுபிடித்து அறிமுகம் செய்யும் புதிய இன ரப்பர் மரங்களை நடவு செய்ய விவசாயிகள் தயங்கக் கூடாது.

மிகக் குறைந்த அளவு உரம் தேவைப்படும் பயிர் ரப்பர் மட்டுமே. ரப்பர் பயிரிடும் மண்ணின் தன்மை மற்றும் ரப்பர் மரங்களின் இலை ஆகியவற்றை ரப்பர்

வாரியத்தில் கொடுத்து பரிசோதனை செய்து, ரப்பருக்கு தேவையான உரமிட வேண்டும்.

குமரி மாவட்ட மண்ணில் மக்னீசியம் அதிக அளவில் இருப்பதால், ரப்பருக்கு மக்னீசியம் அடங்கிய உரம் இடக்கூடாது. புதிய ரப்பர் மரங்கள் 20 இஞ்ச் பருமன் அளவுக்கு வந்த பின்னரே பால்வடிப்பு செய்ய வேண்டும் என்றார்.நிகழ்ச்சிக்கு சிறு ரப்பர் விவசாயிகள் சங்க வழிகாட்டி ஜி.கிருஷ்ணன் நம்பூதிரி தலைமை வகித்தார்.

தலைவர் கோபகுமார், துணைத் தலைவர் ஜி. சஜிகுமார், செயலர் ஜான் டானியல், பொருளர் சாகுல் அமீது, ரப்பர் வாரிய வளர்ச்சி அலுவலர் எம்.மோகன்குமார், கள அலுவலர் சதீஷ் சந்திரன், பால்வடிப்பு பயிற்சியாளர் சிவதாசன் மற்றும் முன்னோடி ரப்பர் விவசாயிகள் பங்கேற்றனர்.

### கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணை திறப்பு

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் அணையிலிருந்து கார் பருவ  சாகுபடிக்கு வியாழக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்மூலம் இம்மாவட்டத்தில் 7 கால்வாய்கள் மூலம் 40 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தென்மேற்குப் பருவமழை சீராகப் பெய்துவருவதையடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலாறு, கடனாநதி, ராமநதி உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. வியாழக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 90.20 அடியாக இருந்தது.

இதைத்தொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா புதன்கிழமை  உத்தரவிட்டார்.

அதன்படி, பாபநாசம் அணையிலிருந்து வியாழக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.  மாநில வீட்டு வசதி வாரியத் தலைவர் ஆர்.

முருகையாபாண்டியன் தண்ணீரைத் திறந்துவிட்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி கால்வாய், பாளையங்கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன்கால்வாய், வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய் ஆகிய 7 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நீரினை சிக்கனமாகப் பயன்படுத்தி பாசனம் செய்ய வேண்டும். நானும் ஒரு விவசாயி என்ற முறையில் முதல்வருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்றார் அவர்.

நிகழ்ச்சிக்கு எஸ்.எஸ். ராமசுப்பு எம்.பி., இசக்கிசுப்பையா எம்.எல்.ஏ., தாமிரவருணி கோட்ட கண்காணிப்புப் பொறியாளர் எஸ். சிரில் கிறிஸ்டோபர், தாமிரவருணி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அணையிலிருந்து 1,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பாசனத்துக்கு 110 தினங்களுக்கு தண்ணீர் வழங்கப்படும். அணையின் நீர்வரத்தைப் பொறுத்து தூத்துக்குடி மாவட்டத்தில் 4 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 46,107 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ராமநதி அணை நிரம்புகிறது: வியாழக்கிழமை நிலவரப்படி சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 109.09 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.85 அடியாகவும் இருந்தது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 2.80 அடி உயர்ந்து 65.00 அடியாக இருந்தது. ராமநதி அணையின் நீர்மட்டம் 2.50 அடி உயர்ந்து 75.00 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 100 கனஅடி நீர்வரத்து இருந்தது. 84 அடி கொள்ளளவு கொண்ட ராமநதி அணை ஓரிரு நாள்களில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மணல் கொள்ளை: பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகள்

திருக்கோவிலூர் பகுதியில் தொடந்து நடைபெறும் மணல் கொள்ளையால் போதிய தண்ணீர் வசதியின்றி பயிர் செய்ய முடியாமல் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

திருக்கோவிலூரையொட்டி தென்பெண்ணையாறு செல்கிறது. இந்த ஆற்று நீரே, சுற்றுப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகளின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்குகிறது.ஆனால், அண்மைக்காலமாக, தென்பெண்ணையாற்றில் மணல் கொள்ளை அதிகரித்து வருகிறது.

இதனால் மணல் வளம் குன்றி தென்பெண்ணையாறு பொட்டல் காடாக காட்சியளிக்கிறது.மேலும் அதிகளவில் மணல் அள்ளப்படுவதால், அப்பகுதியைச் சுற்றிலும் நிலத்தடி நீர்மட்டமும் பெருமளவில் குறைந்துவிட்டது.இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, திருக்கோவிலூர் அருகே விளந்தை கிராமத்தில் 500 ஏக்கர் பரப்பளவிலான பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரியை நம்பி 2 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் பாசன நிலங்கள் உள்ளன. பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான இந்த ஏரிக்கு தென்பெண்ணையாற்றில் இருந்து வாய்க்கால் வழியாக தண்ணீர் வருகிறது. ஆற்றில் சற்று அதிக அளவில் தண்ணீர் வந்தாலே நிரம்பிவிடும் இந்த ஏரி, தற்போது ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் கூட நிரம்புவது இல்லை என கிராம மக்கள் கூறுகின்றனர்.

தென்பெண்ணையாற்றில் நடைபெறும் மணல் கொள்ளைதான் இதற்கு முக்கியக் காரணம் எனவும் அவர் குற்றம்சாட்டுகின்றனர்.

இதனால் வசதிப் படைத்தவர்கள், தங்களுக்குச் சொந்தமான நிலத்தில் ஆழ்துளைக் கிணறு (போர்வெல்) அமைத்து விவசாயம் செய்கின்றனர். ஆனால், ஏரி நீரை மட்டுமே நம்பியுள்ள ஏழை விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த ஏரி மற்றும் ஏரிக்கு வரும் ஆற்று வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தவும், மணல் கொள்ளையை நிரந்தரமாக தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.06.2013 A.M**

---

## தாமரைக்குளம் வரத்து வாய்க்காலை சீரமைக்காததால் விவசாயம் பாதிப்பு

உத்தமபாளையம்:ராமசாமிநாயக்கன்பட்டி, தாமரைக்குளம் கண்மாய்க்கு வரும் வரத்து வாய்க்கால் கரைப்பகுதில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வார விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உத்தமபாளையம் ஒன்றியம், ராமசாமிநாயக்கன்பட்டியில் தாமரைக்குளம் உள்ளது. 183 ஏக்கர் பரப்பளவில் உள்ள இக்கண்மாயால், 800 ஏக்கர் நிலம் இருபோக பாசன வசதியை பெற்று வருகிறது. இக்கண்மாயில் நீரை முழுமையாக சேமித்தால், பற்றாக்குறை காலங்களில், மழை இல்லாமலேயே முழுமையான விளைச்சலை பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

இக்கண்மாய்க்கு பாளையம் பரவு வாய்க்காலில் இருந்து தண்ணீர் வந்து சேர்கிறது. அருகில் உள்ள ராயப்பன்பட்டியில் இருந்து 3 கி.மீ., தூரம் வரத்து வாய்க்காலின் வழியாக தண்ணீர் வந்தடைகிறது. இந்த வரத்து வாய்க்கால் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி உள்ளதால், தண்ணீர் இடையில் வீணாகிறது. முழுமையாக கண்மாய்க்கு வந்து சேர்வதில்லை.

வாய்க்காலின் இரு கரைகளிலும் ஆக்கிரமிப்புகள் அதிகமாகி, வாய்க்காலின் அகலம் குறுகியுள்ளது. தூர்வாரி பராமரிக்காததால் நீர் வரத்து மிகவும் குறைந்துவிட்டது.

கரைகள் பலமிழந்து சில இடங்களில் உடைந்துள்ளது. இதனால் கண்மாய்க்கு வரவேண்டிய தண்ணீரின் அளவு வெகுவாக குறைந்து, போதுமான பாசனவசதி

கிடைப்பதில்லை.

உத்தமபாளையம் , கம்பம் பள்ளத்தாக்கு பெரியாறு ஆயக்கட்டு நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் தர்வேஸ் முகையதீன் தலைமையில் விவசாயிகள், இக்கண்மாயின் தேவைகள், அதனை செயல்படுத்தாததால் ஏற்படும் இழப்பீடுகள் குறித்து, அரசுக்கும் பொதுப்பணித்துறைக்கும் கோரிக்கை மனுக்களை அனுப்பியுள்ளனர்.

## வீரிய ரக விதை நெல் விற்பனையில் வெளிப்படை அணுகுமுறை தேவை

கம்பம்:வீரிய ரக விதை நெல் விற்பனையில், விவசாயத்துறையினர் மீது விவசாயிகள் "சந்தேகப்' பார்வையில் உள்ளனர். இதை தவிர்க்க, வெளிப்படையான அணுகுமுறையை விவசாயத்துறையினர் மேற்கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு பருவ மழை ஏமாற்றியதால், கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போகம் பரவலாக கைவிடப்பட்டது. தற்போது, நெல் விதைப்பிற்கான ஆயத்த பணிகளில் இறங்கியுள்ளனர்.

விதை நெல் வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.பெரும்பாலான விவசாயிகள் வீரிய ரக விதைகளை விரும்புகின்றனர். இந்த ரகம் கிலோ ரூ. 230 வரை உள்ளது.

தற்போது, கம்பம் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு, 625 கிலோ வீரிய ரக கோக்நாத் 509 ரகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த விதை, எஸ்.ஆர்.ஐ. திட்டத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மட்டும் என்றும், ரோட்டோரங்களில் வயல் வைத்துள்ளவர்களுக்கு மட்டும் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

சிலர், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு, விதை நெல் விற்பனையில் "தாராளம்' காட்ட ஆரம்பித்து விட்டதாகவும், புகார் எழுந்துள்ளது.இதனால் பெரும்பாலான

விவசாயிகள் மத்தியில், அதிகாரிகள் மீது "சந்தேகப்' பார்வை விழுந்துள்ளது.உதவி இயக்குநர் அசோகன் கூறியதாவது:

செம்மை நெல் சாகுபடியை பின்பற்றுபவர்களுக்கு,1500 ரூபாய்க்கு விதை நெல் மற்றும் உரம் இலவசமாக தருகிறோம். ஒரு ஹெக்டேருக்கு 5 கிலோ அனுமதிக்கப்பட்டுள்ளது. வீரிய ரகம் சோதனைக்கு மட்டுமே. விற்பனைக்கல்ல' என்றார்.

எந்தெந்த விவசாயிகளுக்கு, எவ்வளவு விதை நெல் இலவசமாக தந்தனர் என்பதை,விவசாயத்துறையினர் நோட்டீஸ் போர்டில் அறிவிப்பு செய்ய வேண்டும், என்று விவசாயிகள் விரும்புகின்றனர்.

## கார் சாகுபடி பாசனத்திற்கு பாபநாசம் அணை திறப்பு

விக்கிரமசிங்கபுரம் : நெல்லை மாவட்டத்தில் கார் சாகுபடி பாசனத்திற்காக பாபநாசம் அணை நேற்று (20ம் தேதி) திறக்கப்பட்டது. அணையை தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர் முருகையாபாண்டியன் திறந்து வைத்தார். பாபநாசம் அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தி நெல்லை மாவட்டத்தில் வடக்கு கோடை மேலழகியான் கால்வலாய் 2260 ஏக்கர், தெற்கு கோடை மேலழகியான் கால்வாய் 870 ஏக்கர், நதியுன்னிகால்வாய் 2460 ஏக்கர், கன்னடியன் கால்வாய் 12500 ஏக்கர், கோடகன்கால்வாய் 6000 ஏக்கர், பாளையங்கால்வாய் 9500 ஏக்கர், திருநெல்வேலி கால்வாய் 6410 ஏக்கர் ஆக மொத்தம் 7 கால்வாய்களின் மூலம் 40ஆயிரம் ஏக்கர் நிலங்கள் விவசாயம் செய்யப்படுகிறது. மாவட்டத்தில் கார் சாகுபடி பாசனத்திற்காக பாபநாசம் அணையை திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 90.20 அடியாக இருந்தது.அணைக்கு விநாடிக்கு 1967கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணைப்பகுதியில் 4 மி.மீ. மழையும், கீழணையில் 1 மி.மீ. மழையும், சேர்வலாறில் 4 மி.மீ, மணிமுத்தாறில் 5.2 மி.மீ., அம்பையில் 2 மி.மீ. அளவில் மழை பதிவாகியிருந்தது. நேற்று சேர்வலார்

அணையின் நீர்மட்டம் 109-09 அடியாகவும், மணிமுத்தாறு அணை 70.85 அடியாகவும் இருந்தது. இந்நிலையில் நெல்லை மாவட்டத்தில் கார்சாகுபடி பாசனத்திற்காக நேற்று பாபநாசம் அணையிலிருந்து 1000 கனஅடிநீர் திறந்து விடப்பட்டது. மொத்தம் 110 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். அணையை திறந்து வைத்து முருகையாபாண்டியன் கூறியதாவது:- மாவட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழக முதல்வர் பாபநாசம் அணையை திறக்க உத்தரவிட்டுள்ளார். தற்போது நல்ல மழை பெய்து வருகிறது. தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவும், விவசாயத்தில் விவசாயிகள் அமோக விளைச்சல் பெற வேண்டும்மென்று அவர் பேசினார். நிகழ்ச்சியில் நெல்லை தொகுதி எம்.பி., ராமசுப்பு, அம்பை., தொகுதி எம்.எல்.ஏ., சுப்பையா, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் சிரில் கிறிஸ்டோபர், செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், பாபநாசம் அணை செயற்பொறியாளர் மாணிக்கவாசகம், உதவி செயற்பொறியாளர்கள் மாயமுருகன், தமிழ்செல்வன், மதன சுதாகரன், பாலசுப்பிரமணியன், சீனிவாசன், மத்திய கப்பல் போக்குவரத்து கழக ஆலோசனைக்குழு உறுப்பினர் அமீர்கான், உணவு கழக ஆலோசனைக்குழு உறுப்பினர் வைகுண்டராஜா, அம்பை தாசில்தார் சரஸ்வதி,முன்னாள் எம.எல்.ஏ.,சக்திவேல்முருகன் வி.கே.புரம் நகராட்சி தலைவி மனோன்மணி, அம்பை நகராட்சி தலைவி செல்வி, மணிமுத்தாறு டவுன் பஞ்., தலைவர் சிவன்பாபு, வீரவநல்லூர் டவுன் பஞ்.,தலைவர் பழனிச்சாமி, அம்பை ஒன்றிய திமுக செயலாளர் சிவகுருநாதன், அம்பை ஒன்றிய அதிமுக முன்னாள் செயலாளர் தாயப்பராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கன்னிப்பூ சாகுபடிக்காக பேச்சிப்பாறை அணை திறப்பு

நாகர்கோவில் : கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னிப்பூ சாகுபடிக்காக பேச்சிப்பாறை அணை திறக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளுக்காக ஜூன் முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டு ஜூன் முதல் வாரத்துக்கு முன்பாகவே பருவமழை தொடங்கி விட்டதாலும், அதற்கு முன்னர் கடும் வறட்சி நிலவி

அணையில் நீர்மட்டம் குறைவாக இருந்ததாலும் அணைகள் திறக்கப்படவில்லை. விவசாயிகள் மழை நீரை வைத்து நடவு பணிகளை தொடங்கியிருந்தனர். இந்நிலையில், குமரி மாவட்ட விவசாயத்துக்காக அணைகளை திறக்க முதல்வர் ஜெ., உத்தரவிட்டார். அதன்படி கலெக்டர் நாகராஜன் பேச்சிப்பாறை அணை ஷட்டரை திறந்தார். தற்போது அணையிலிருந்து 200 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அணை திறக்கும் போது அணையில் 999 மில்லியன் கனஅடி தண்ணீர் இருந்தது, ஆனால் தற்போது 1506 கனஅடி தண்ணீர் உள்ளதால் விவசாயத்துக்கு தேவைக் கேற்ப தண்ணீர் திறந்து விடமுடியும் என்று கலெக்டர் நாகராஜன் கூறினார். பருவமழை பெய்து வரும் நிலையில் அணையும் திறக்கப்பட்டுள்ளதால், இந்த ஆண்டு விவசாயம் நல்லபடியாக நடைபெறும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

### மழை எதிர்பார்ப்பு

வரதாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: இப்பகுதி, தண்ணீர் குறைவான பகுதி என்பதால்,வேர்க்கடலை, ராகி பயிர்கள் விதைப்பது வழக்கம். தற்போது, பருவ மழை துவங்கியிருப்பதால், ஆடியில் விதை விதைக்க, நிலங்களை புழுதி ஓட்டி, பக்குவப்படுத்தி வருகிறோம். பருவ மழை தீவிரம் அடைந்தவுடன், நெல் விதைப்பு விதைக்கலாம். கடந்த ஆண்டு, மழை குறைவாக பெய்தது. இதனால், மானாவாரி பயிர்களான மணிலா பயறு விதைக்கப்பட்டது. இம்முறை, மழை அதிகமாக பெய்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இவ்வாறு அவர் கூறினார். இதுகுறித்து, வேளாண்மை துணை இயக்குனர் பழனிவேலு கூறுகையில்,"" நடப்பாண்டு சராசரி அளவு மழையை விட சற்று கூடுதலாக மழை பெய்வதற்கு வாய்ப்பு உள்ளதால், தண்ணீர் வசதி இல்லாத விவசாயிகள், புழுதிகால் விதைப்பாடு விதைப்பதற்காக, தற்போது நிலங்களை புழுதி ஓட்டி மண் தன்மையை பக்குவப்படுத்தி வருகின்றனர். மழைக்காலத்தில் புழுதி ஓட்டினால்,

மண் ஒத்துழைப்பு அளிக்காது. . ஆகையால், மழைக்காலம் துவங்கும் முன்பே, விவசாயிகள் தங்கள் நிலங்களை புழுதி ஓட்டி பக்குவப்படுத்தி வருகின்றனர்" என்றார்.

## ஆடி பட்டம்;விதைப்புக்கு நிலங்களை தயார் செய்யும் விவசாயிகள்

காஞ்சிபுரம்: கோடை மழையால், விவசாயிகள் தங்களின் நிலங்களில், புழுதி ஓட்டி நிலத்தை பதப்படுத்தும் பணியை துவக்கியுள்ளனர்.
தோட்டக்கலை பயிர்கள் காஞ்சிபுரம் அடுத்த சிறுவாக்கம், பரந்தூர், புரிசை, புள்ளலூர், தண்டலம், அக்கமாபுரம், வளத்தூர், தென்னேரி, ஊத்துக்காடு, புத்தகரம் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில், பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது. இதில், வரதாபுரம், புரிசை, புள்ளலூர், தண்டலம், பள்ளம்பாக்கம் போன்ற கிராமங்களில் உள்ள மண் வளம், தோட்டக்கலை பயிர்களுக்கு ஏற்றதாக உள்ளது.தற்போது, கோடை மழை பருவம் துவங்கி உள்ளதால், மணிலா பயிரிடும் விவசாயிகள், தங்களின் நிலங்களில் புழுதி ஓட்டி, நிலங்களை பக்குவப்படுத்தி வருகின்றனர்.

## மழைநீர் விழிப்புணர்வு பேரணி

திருமழிசை: மழைநீர் சேகரிப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி நடந்தது.

திருமழிசையில் நடந்த மழை நீர் சேகரிப்பு குறித்து நடந்த விழிப்புணர்வு பேரணிக்கு, பேரூராட்சி தலைவர் அமுதா முனுசாமி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் மகாதேவன் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி அலுவலர் ஜோசப் வரவேற்புரையாற்றினார். பேரூராட்சிகளின் இணை இயக்குனர் செல்வம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். விழாவில், பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்டு, மழைநீர் சேகரிப்பால் ஏற்படும் நன்மைகள் குறித்த விளம்பர பதாகைகள் ஏந்தி, முக்கிய வீதிகளின் வழியாக பேரணி நடந்தது.

## அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் ; பவானிசாகர் நீர் மட்டம் உயர்வால் எதிர்பார்ப்பு

கோபிசெட்டிபாளையம்: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் உயர்வதால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.கொடிவேரி அணை மூலம் தடப்பள்ளியில், 17 ஆயிரத்து, 658 ஏக்கர், அரக்கன்கோட்டை வாய்க்கால் மூலம், 6,850 ஏக்கர் என மொத்தம், 24 ஆயிரத்து, 508 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், 15ம் தேதி தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் முதல் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். பருவமழை பொய்த்தாலும், காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு நான்கு டி.எம்.ஸி., தண்ணீர் திறக்க வேண்டும், என உத்தரவிடப்பட்டுள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியால், தண்ணீர் திறக்கவில்லை.

தென்மேற்கு பருவமழையால் பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான அவலாஞ்சி, ஏமரால்டு, பைக்கரா, சாண்டிநல்லா போன்ற இடங்களில் மழை பெய்து வருகிறது. மழையால், பவானிசாகர் அணைக்கு, 5,000 முதல், 1,000 கனஅடி வரை தண்ணீர் வரத்தாகிறது. தண்ணீர் வரத்து அதிகரிப்பால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 46 அடியை தாண்டியது. அணையில், 3.5 டி.எம்.ஸி.,க்கு மேல் தண்ணீர் இருப்பு உள்ளது. அணையின் நீர்மட்டம் உயர்வால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் விட வேண்டுமென, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க தலைவர் தளபதி கூறியதாவது: இப்பாசனத்தில் இரண்டு போகத்திலும் தண்ணீர் திறக்கப்படும்போது, கோபி சுற்று

வட்டாரம் பசுமையாக காணப்படும். மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இப்பகுதிகள் அமைந்துள்ளதால், பருவமழை சரியான நேரத்தில் பெய்யும். இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் பசுமை இழந்து காணப்படுகிறது. பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்வதால், அணைக்கு, 5,000 கனஅடி வரை தண்ணீர் வரத்தாவதால், அணையின் நீர்மட்டம், 46 அடியை தாண்டியது. அணையில், மூன்று டி.எம்.ஸி.,க்கு மேல் தண்ணீர் இருப்பு உள்ளதால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## ரூ.56.11 கோடி வறட்சி நிவாரணம் அரசு ஒதுக்கீடு: கலெக்டர் தகவல்

நாமக்கல்: ""நாமக்கல் மாவட்டத்துக்கு, 56.11 கோடி ரூபாய் வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், ஒரு லட்சத்து, 25 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர்," என, மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் பேசினார்.
நாமகிரிப்பேட்டை யூனியனுக்கு உட்பட்ட சிங்கிலியங்கோம்பை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், மனுநீதி நாள் முகாம், நேற்று நடந்தது. மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்து பேசியதாவது:
கடந்த ஒரு மாதத்துக்கு முன், இக்கிராமத்தில், 202 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றில், 92 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நலத்திட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது. 52 மனுக்கள், பரிசீலனையில் உள்ளது. அவற்றின் மீதும், விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்படும்.
தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியை கருத்தில் கொண்டு, நாமக்கல் மாவட்டத்துக்கு, 56.11 கோடி ரூபாயை, அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம், ஒரு லட்சத்து, 25 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர்.இவ்வாறு அவர் பேசினார்.முன்னதாக, 200 பயனாளிகளுக்கு, 14 லட்சம் ரூபாய் மதிப்பில், நலத்திட்ட உதவி வழங்கப்பட்டது. நாமக்கல் ஆர்.டி.ஓ., அஜய்யாதவ், யூனியன் சேர்மன் பொன்னுசாமி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணைக் கலெக்டர் பாலசுப்ரமணியம் உட்பட பலர் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

21.06.2013 A.M

## மலிவுவிலை காய்கறி கடைகள் முதல்வர் திறந்து வைத்தார்



சென்னை : காய்கறி விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 31 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளை தலைமை செயலகத்தில் இருந்து வீடியோ கான்பரன்ஸ் மூலம் முதல்வர் ஜெயலலிதா நேற்று திறந்து வைத்தார். இதன்படி, சென்னை மாநகரில் தேனாம்பேட்டை, ராயப்பேட்டை, திருவல்லிக்கேணி, ராஜா அண்ணாமலைபுரம், வேளச்சேரி, சைதாப்பேட்டை, வில்லிவாக்கம், கீழ்ப்பாக்கம், பெரியார் நகர், கண்ணம்மா பேட்டை மற்றும் துரைப்பாக்கம் ஆகிய 11 இடங்களிலுள்ள டி.யு.சி.எஸ். விற்பனை நிலையங்களிலும் அண்ணா நகர், வில்லிவாக்கம் மற்றும் ஷெனாய் நகர் ஆகிய 3 இடங்களிலுள்ள பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கடைகளிலும், தாம்பரம் கிழக்கு, குரோம்பேட்டை, போரூர், பல்லாவரம் மற்றும் ஆலந்தூர் ஆகிய 5 இடங்களில் காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கடைகளிலும் விற்பனை செய்யப்படும்.

மாத்தூர் மற்றும் ஆர்.வி. நகர் ஆகிய 2 இடங்களில் வட சென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கடைகளிலும், அடையார் மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய 2 இடங்களில் தொடக்க கூட்டுறவு பண்டகசாலை கடைகளிலும், அண்ணா நகர், நந்தனம், கீழ்ப்பாக்கம், கோபாலபுரம், இந்திரா நகர் மற்றும் சூளைமேடு ஆகிய 6 இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கடைகளிலும் என மொத்தம் 29 கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும். மயிலாப்பூர் மற்றும் கோயம்பேடு ஆகிய இடங்களில் டி.யு.சி.எஸ். நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 2 நடமாடும் கடைகள் மூலமாகவும் காய்கறிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படும்.

## மலிவு கடைகளில் சில காய்கறிகள் விலை அதிகம்



சென்னை : தமிழக அரசால் புதிதாக தொடங்கப்பட்டுள்ள பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறி கடைகளில், கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டை விட விலை அதிகமாக உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். காய்கறி விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில் பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறி கடைகள் திறக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்து, அதன்படி நேற்று 31 இடங்களில் கடைகளை திறந்து வைத்தார்.

இந்த கடைகளில் கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டை விட சில காய்கறிகளின் விலை அதிகமாக உள்ளதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர். சில காய்கறிகள்

விலை பசுமை அங்காடிகளில் ரூ.2 முதல் ரூ.3 வரை குறைவாக உள்ளது. சிலவற்றின் விலை கோயம்பேட்டில் குறைவாக உள்ளது. சில்லறை கடைகளிலும் விலைகள் மாறுபடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

காய்கறி விலை (ஒரு கிலோ)

| | மலிவு விலை கடை | கோயம்பேடு மார்க்கெட் | மயிலாப்பூர் சில்லரை விலை |
|---|---|---|---|
| பல்லாரி | ரூ. 20 | ரூ. 20 , 22 | ரூ. 29 |
| சி.வெங்காயம் | ரூ. 60 | ரூ. 85 | ரூ. 85 |
| தக்காளி | ரூ. 30 | ரூ. 40 | ரூ. 45 |
| உருளை | ரூ. 20 | ரூ. 18 | ரூ. 35 |
| கேரட் | ரூ. 40 | ரூ. 30 | ரூ. 30 |
| பீன்ஸ் | ரூ. 50 | ரூ. 45 | ரூ. 30 |
| முட்டைக்கோஸ் | ரூ. 18 | ரூ. 10 , 12 | ரூ. 12 |
| சவ்சவ் | ரூ. 25 | ரூ. 40 | ரூ. 40 |
| கத்தரி | ரூ. 25 | ரூ. 15 | ரூ. 15 |
| முள்ளங்கி | ரூ. 16 | ரூ. 12 | ரூ. 12 |
| தேங்காய் (ஒன்று) | ரூ. 8 | ரூ. 8, 10, 12 | ரூ. 8 |
| இஞ்சி | ரூ. 140 | ரூ. 200 | ரூ. 140 |
| புடலை | ரூ. 25 | ரூ. 16 | ரூ. 15 |
| வெண்டை | ரூ. 24 | ரூ. 30 | ரூ. 20 |
| முருங்கை | ரூ. 30 | ரூ. 35 | ரூ. 35 |
| அவரை | ரூ. 40 | ரூ. 35 | ரூ. 30 |
| பீட்ரூட் | ரூ. 20 | ரூ. 20 | ரூ. 18 |
| காலிபிளவர் | ரூ. 15 | ரூ. 15 , 20 | ரூ. 15 |
| சேனை கிழங்கு | ரூ. 25 | ரூ. 20 | ரூ. 20 |

| | | | |
|---|---|---|---|
| கோவக்காய் | ரூ. 20 | ரூ. 15 | ரூ. 15 |
| பச்சை மிளகாய் | ரூ. 30 | ரூ. 25 | ரூ. 25 |
| பாகற்காய் | ரூ. 25 | ரூ. 20 | ரூ. 25 |
| சுரைக்காய் | ரூ. 10 | ரூ. 12 | ரூ. 12 |

இவ்வாறு விலைகள் வித்தியாசப்படுகின்றன. காய்கறி விலை இடத்துக்கு இடம், மார்க்கெட்களுக்கு வரத்துக்கு ஏற்ப மாறுபடும் என்பதும், சில்லரை கடைகளில் விலை வித்தியாசம் இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் கீரை உற்பத்தியில் விவசாயிகள் தீவிரம்

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் கீரை உற்பத்தியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

மனித உணவில் கீரைகள் அவசியம் என மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். பல மருத்துவ குணங்கள் நிறைந்த கீரைகள் தற்போது ராமநாதபுரம் மாவட்ட கிராமங்களில் பயிரிடப்படுகிறது. தண்டு கீரை மட்டுமே இங்கு பயிரிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. வேளாண்மை, தோட்டக்கலைத்துறை சார்பில் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டதன் மூலம் குறுகிய காலத்தில் அதிக வருவாய் ஈட்டும் கீரைகளை தற்போது விவசாயிகள் பயிரிட்டு பயனடைந்து வருகின்றனர்.

ராமநாதபுரம் பகுதியில் களத்தாவூர், காட்டூரணி, நயினார்கோவில் ஒன்றியம், மந்திவலசை, மெய்யனேந்தல், கே.வலசை, பாண்டியூர் உள்ளிட்ட கிராமங்களில் பல்வேறு கீரைகள் பெருமளவு பயிரிடப்படுகிறது.

தண்டுகீரை தவிர தற்போது, பாலா கீரை, அரைக்கீரை, சிறுகீரை, அகத்திக் கீரை, முளைக்கீரை, பொன்னாங்கன்னி கீரை பயிரிடப்படுகிறது. கால்சியம், இரும்பு சத்து மிக்க பாலாகீரை இருதய நோய் மற்றும் சர்க்கரை நோயாளிகள் உணவாக

பயன்படுத்தலாம். வயிற்றுபுண் உள்ளிட்ட நோய்களுக்கு அகத்திக்கீரை. கண் குளிர்ச்சி, வாதம், பித்தம் போன்ற நோய் எதிர்ப்புக்கு பொன்னாங்கன்னி கீரையை பயன்படுத்தலாம். இந்த வகை கீரைகள் தற்போது பயிரிடப்பட்டு குறைந்த விலையில் ராமநாதபுரத்தில் விற்பனைக்கு வருகிறது.

இதுகுறித்து விவசாயி பாண்டியூர் தட்சிணாமூர்த்தி கூறுகையில், Ôஎனது நிலத்தில் துவக்க காலத்தில் தண்டுக்கீரை மட்டுமே பயிரிட்டு வந்தேன். தற்போது தோட்டக்கலை ஆலோசனையின் பேரில் சிறுகீரை, பொன்னாங்கன்னி, பாலாகீரை, முளைக்கீரை உள்ளிட்ட கீரைகளை பயிரிட்டு வருகிறேன். பயிரிட்ட 20 நாட்களில் பலன் தருகிறதுÕ என்றார்.

அட்மா திட்டம் வேளாண்மை தொழில்நுட்ப வல்லுனர் ஏகாம்பரம் கூறுகையில், Ôசீனாவை அடுத்து 2வது இடத்தில் காய்கறி உற்பத்தியில் இந்தியா உள்ளது. நிறம், மணம், சுவை மட்டுமல்லாது உடல் ஆரோக்கியத்திற்கும் உயிர்சத்துக்கள், தாதுஉப்புக்கள், வைட்டமின், நார்சத்து நிறைந்த உணவாக கீரை உள்ளது. தற்போது, மாவட்டத்தில் தோட்டக்கலை உதவி இயக்குனர் ஆறுமுகம், உதவி அலுவலர் நாகராஜன், அலுவலர்கள் ஆலோசனையின்பேரில் நூற்றுக்கான ஏக்கரில் கீரைகள் பயிரிடப்பட்டு விற்பனைக்கு வருகிறது.

## மழைநீர் சேகரிப்பு வலியுறுத்தி தேனியில் விழிப்புணர்வு பேரணி

தேனி, : மழை நீர் சேகரிப்புக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான பிரசார பேரணி தேனி நகராட்சி சார்பில் நடத்தப்பட்டது.

வீடுகள், கடைகள், விடுதிகள், அரசு கட்டடங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டுமானப்பணிகள் நடக்கும் இடங்களிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இத்தகைய மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்பதன் மூலமாக மழை காலங்களில் கட்டடத்தின் மேற்பகுதியில் இருந்து வழிந்தோடும் நீர் மழை நீர் தொட்டியில் சேகரிப்பதன் மூலம் நிலத்தடி நீர்

உயரும் வாய்ப்பு உள்ளது. இதேபோல் வீடுகளில் குளியலறை நீரையும் மழைநீர் சேகரிக்கும் தொட்டிகளில் சேர்க்கும்போதும் நிலத்தடி நீர் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, நிலத்தடி நீரை அதிகரிக்க தமிழக அரசு விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ள உள்ளாட்சித் துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

நேற்று தேனி&அல்லிநகரம் நகராட்சி சார்பில், மழைநீர் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. நகராட்சி அலுவலகம் முன்பாக துவங்கிய இப்பேரணிக்கு நகராட்சி துணைத்தலைவர் காசிமாயன் பேரணியை துவக்கி வைத்தார். இதற்கு நகராட்சி ஆணையர்(பொறுப்பு) ராஜாராம் முன்னிலை வகித்தார். இதில் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் வீரணன், நகராட்சி சுகாதார அலுவலர் சுருளிநாதன், நகராட்சி கவுன்சிலர்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணி நகராட்சி அலுவலகத்தில் துவங்கி பெரியகுளம் ரோடு, ரயில்வே கேட், நேரு சிலை, மதுரை ரோடு வழியாக சென்று பங்களாமேடு பகுதியில் நிறைவடைந்தது. இப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் மழை நீரை சேகரிப்போம், நிலத்தடி நீரை காப்போம் போன்ற வாசகங்கள் அடங்கிய பேனரை பிடித்து கோஷமிட்டபடி சென்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 21.06.2013 A.M

### தெய்வச்செயல்புரம், வல்லநாடு பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் கலெக்டரிடம் கோரிக்கை மனு

தூத்துக்குடி,

தெய்வச்செயல்புரம், வல்லநாடு பகுதி விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி விவசாயிகள் மனு கொடுத்தனர்.

குறைதீர்க்கும் நாள்

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று காலை கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்துக்கு கலெக்டர் ஆஷிஷ்குமார் தலைமை தாங்கினார்.

வேளாண்மை இணை இயக்குனர் பொன் காத்தபெருமாள், உதவி இயக்குனர் (தோட்டக்கலை) ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வறட்சி நிவாரணம்

கூட்டத்தில் தெய்வச்செயல்புரம், வல்லநாடு பகுதி விவசாயிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் தங்கள் பகுதியில் வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆனால் எங்கள் பகுதி வறட்சி நிவாரணத்தில் சேர்க்கப்படவில்லை. ஆகையால் எங்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி மனு கொடுத்தனர்.

கலெக்டர் ஆஷிஷ்குமார்: தூத்துக்குடி வேளாண்மை அலுவலர்கள், கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி பேராசிரியர்கள் அடங்கிய குழு அமைத்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கந்தசாமி: வாழைப்பயிர் விலையில்லாமல் அழிந்து விடுகிறது. ஆகையால் நெல்லுக்கு விலை வைப்பது போன்று வாழைக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

கிருஷ்ணமூர்த்தி: மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலெக்டர்: உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>கால்நடை துணை மருந்தகம்</u>

ராஜேந்திரபூபதி: அத்திமரப்பட்டியில் கால்நடை துணை மருந்தகம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த மருந்தகம் நீண்ட நாட்களாக செயல்படாமல் உள்ளது. அதனை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரி: தற்போது முள்ளக்காடு கால்நடை மருந்தகத்தில் இருந்து வாரத்துக்கு 2 நாட்கள் அலுவலர்கள் அத்திமரப்பட்டிக்கு சென்று வருகின்றனர்.

கலெக்டர்: ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜேந்திரன்: மருதூர் அணைக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும்.

அதிகாரி: மருதூர் அணைக்கு கண்டிப்பாக தண்ணீர் திறந்து விடப்படும்.

விவசாயி: விளாத்திகுளம் பகுதியில் கறம்பை மணலை அள்ளி விவசாயிகளுக்கு விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதனை தடுக்க வேண்டும்.

கலெக்டர்: விவசாயிகள் கறம்பை மணலை அள்ளிக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. அதனை யாரும் அள்ளி விற்பனை செய்யக்கூடாது. இது கண்காணிக்கப்படும்.

<u>விலைப்பட்டியல்</u>

பெருமாள்: தனியார் உரம் விற்பனை நிலையங்களில் விலைப்பட்டியல் வைக்க வேண்டும். ஓட்டப்பிடாரம் பெரியகுளத்துக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பேய்க்குளம் கட்டாரிமங்கலத்தில் உள்ள கிரசர் நிறுவனத்தால் அந்த பகுதியில் மாசுபடிந்து விவசாயம் பாதிக்கிறது. இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரி: உர மூடைகளிலேயே விலை எழுதப்பட்டு இருக்கும். இதனை விவசாயிகள் பார்த்துக் கொள்ளலாம். மேலும் விலைப்பட்டியல் முறையாக வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

கூட்டத்தில் உரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் மதியழகன், கோவில்பட்டி கூட்டுறவு பதிவாளர் சிவகாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில் திருந்திய நெல்சாகுபடி விவசாயத்திற்கு மானியம் அதிகாரி தகவல்

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டத்தில் திருந்திய நெல்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானி யம் வழங்கப்படுகிறது என்று வேளாண்மை இணை இயக்குனர் தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து திருவண்ணா மலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சக்கர வர்த்தி கூறியிருப்பதாவது:

**நெல்சாகுபடி**

திருவண்ணாமலை மாவட் டத்தின் முக்கிய பயிராக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சொர்ணவாரி, சம்பா மற்றும் நவரை ஆகிய மூன்று முக்கிய பருவங்களில் சுமார் 1 லட்சத்து நாற்பதாயிரம் எக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படு கிறது.

நெல் சாகுபடி செய்யும் விவ சாயிகள் பயனடைய இந்த ஆண்டு நெல் இயக்கம் செயல் படுத்தப்பட உள்ளது. இத் திட்டத்தின் கீழ் நெல் விதை மற்றும் திருந்திய நெல் சாகு படி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது.

**மானியம்**

நெல் விதைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.5 மானியமும் திருந்திய நெல் சாகுபடிக்கு ரூ.1500 க்கு இடுபொருட்கள் மற்றும் ரூ.1500 பின் மான்யம் ஆக மொத்தம் எக்டருக்கு ரூ. 3000 மான்யம் வழங்கப்பட உள்ளது.

இத் திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் நெல் விதை வினியோகம் 800 மெட்ரிக் டன்னும், திருந்திய நெல் சாகு படிக்கு 3150 எக்டரும் இலக்கு பெறப்பட்டு அனைத்து வட்டாரங்களிலும் செயல் படுத்தப்பட உள்ளது.

எனவே விவசாயிகள் தங் கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர், வேளா ண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி அலுவ லர் ஆகியோரை அணுகி விண்ணப்பித்து பயனடைய லாம்.

மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.